



ஈழப்போராளிகளை உலகின் முகத்தில் இருந்து துடைத்தெறிவேன் என்று கொக்கரித்தான் ரஞ்சன் விஜியரத்னே. ஆனால், இதுதான் அவன் உடல் என்று அடையாளங்கூட காணமுடியாத அளவுக்கு வெந்து கருகிய ஏதோ சதையும் எலும்புகளையும் திரட்டி சவப்பெட்டிக்குள்ளே வைத்துப் புதைக்கப்பட்டான்.



# தகுதியான தண்டனை

## செய்தவர்கள் யாரானாலும் வரவேற்க வேண்டிய புரட்சிகரப் பயங்கரவாதச் செயல்தான்

ரஞ்சன் விஜியரத்னே, சிங்கள இனவெறி பாசிச பயங்கரவாதத்தின் சின்னம்; இலங்கையின் பிணந்தின்னும் காப்புக்காரன் - இராணுவ மந்திரி அவனுக்கே தகுதியான, பொருத்தமான வழிமுறையில் கொழும்பு நகரில் கடந்தவாரம் அழித்தொழிக்கப்பட்டான்.

ஈழப் போராளிகளை உலகின் முகத்தில் இருந்து துடைத்தெறிவேன் என்று கொக்கரித்தான் ரஞ்சன் விஜியரத்னே. இதுதான் அவன் உடல் என்று அடையாளம் காண முடியாத அளவுக்கு வெந்து கருகிய ஏதோ சதையும் எலும்புகளையும் திரட்டி சவப்பெட்டிக்குள்ளே வைத்துப் புதைக்கப் பட்டான்.

குரூரமான வக்கிரமான கொலைவெறி தான் ரஞ்சன் விஜியரத்னேயின் தனிச்சிறப்பு!

— ஐக்கிய தேசியக் கட்சியின் பாசிசக் குண்டர்கள், சிங்கள இராணுவ - போலீசு வெறி நாய்கள், இனவெறிபிடித்த கிரிமினல் குற்றவாளிகள் ஆகியோரைக் கொண்டு இரகசியக் கொலைக் குழுக்களைக் கட்டினான்.

— மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) என்ற குட்டி முதலாளிய பாசிக் குழுவின் அணிகள் மட்டுமல்ல, "சந்தேகத்துக்குரிய" மாணவர்கள் - இளைஞர்களை நரவேட்டையாடினான்.

— ஜே.வி.பி.போராளிகள் எனச் சந்தேகிக்கப்படும் எவரையும் சுட்டுக்கொன்று அங்கேயே எரித்துவிடும் அதிகாரத்தைப் போலீசாருக்கு வழங்கினான். தென்னிலங்கை முழுவதும் எரியும் பிணங்களின் வாடை வீசியது.

— நிராயுத பாணிகளாகக் கைது செய்யப்பட்ட ஜே.வி.பி.யின் தலைவர்கள் அனைவரையும், 'போலீசுடன் மோதல்' என்ற பெயரில் படுகொலை செய்து, பிணங்களைக் கூடக் காட்டாது எரித்துவிட்டான்.

— மலையகத் தோட்டங்களின் தொழிற்சங்க முன்னோடிகள் பலர் மீது இரகசியக் கொலைக் குழுக்களை ஏவிக் கடத்திக் கொன்றான்.

— மேற்கண்ட முறைகளில் ரஞ்சன் விஜியரத்னேயின் நேரடி உத்திரவு - கண்காணிப்பில் ஒரு லட்சம் பேரை ஓராண்டில் கொலை செய்தான் காணாமற்போன இளைஞர்கள் மட்டும் அறுபதாயிரம் பேரென சர்வதேச மனித உரிமை அமைப்பு கூறுகிறது.

— ஈழப் போராளிகளுடன் சமரசம், பேச்சு வார்த்தைக்கு இடமில்லை. இராணுவ வழியில்தான் தீர்வெனக் கூறி, யாழ், மன்னார் போன்ற நகரங்களில் வாழும் இடங்களில் விமானங்களை ஏவிக் குண்டுமாரி பொழிந்தவன் தான்.

இப்படிப்பட்ட அரசு - பாசிச பயங்கர வாதத்துக்குத் தலைமை ஏற்ற ரஞ்சன் விஜிய ரத்னே, புரட்சிகர பயங்கரவாதத்துக்கு பலி யில் பலியானான். அவனது மாளிகையில் இருந்து சிறப்புப் பணிப்படையினர் சூழ, கடந்த மார்ச்சு 2ந் தேதி காலை அலுவலகத்துக்குக் கிளம்பினான். சாலையோரம் நிறுத்தி வைக்கப்பட்ட வெடிமருந்து

கார் வெடித்ததில் குண்டு துளைக்க முடி ... சொகுசுக்காரும், படையினரது இரண்டு கார்களும், சாலை வழியே போன ... பேருந்துகளும் வெடித்துச் சிதறின.

பிணங்களைத் தந்திக் கம்பத்தில் தொங்கவிட்டவனது சதை, காரின் கதவுகளை எகி...போய் அவ்வாறே தொங்கியது. ரஞ்சன் விஜியரத்னேயும், படையினரும் உட்பட ...க்கு மேற்பட்டோர் வெந்து கருகிப் போயினர். வீடுகள், கடைகளும் நாசமடைந்தன. ... மைல்களுக்கு வெடியோசை கேட்டது; ...பிழம்பும் தெரிந்தன; பூமி அதிர்ந்தது; வாகனங்கள் பலவும் பலமணிநேரம் எரிந்தன.

"அந்தப் பகுதியே கோரமான காட்சியாக இருக்கிறது; பார்ப்பதற்கு விமானத் தாக்குதலால் நாசமாக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைப் போலிருக்கிறது" என்றொருவர் வருணிக்கிறார். தகுந்த பதிலடிதானென்று தெரிகிறது.

ரஞ்சன் விஜியரத்னேயை அழித்தொழித்து, பழி தீர்த்துக் கொள்வதற்கு ஜே.வி.பி. இரண்டு முறை முயன்று தோற்றுப் போனது, இந்தச் சம்பவத்துக்கு ஜே.வி.பி.யும் உரிமை கோரவில்லை. தாம் செய்யவில்லை எனப் புலிகளும் மறுத்துவிட்டனர். ஒரு வேளை, எதிர்த்தாக்குதலைத் தவிர்ப்பதற்காக இவ்வமைப்புகள் இவ்வாறு செய்திருக்கலாம்.

இருந்தாலும், ரஞ்சன் விஜியரத்னேயின் சாவுக்கு பழிதீர்க்கும் முகமாக மூன்றாம்நாளே ஈழ மக்கள் மீது விமானக் குண்டு வீச்சில் இறங்கியது பாசிச பிரேமதாசா அரசு. ரஞ்சன் விஜியரத்னேயின் சாவு உண்மையில் அதற்கு பேரிழப்புதான். அவனது பாசிச, பயங்கரவாதக் கொள்கைகள் காரணமாக அடுத்த இலங்கை அதிபராவதற்கு எண்ணியிருந்தான். 'சாவுக்குப் பிந்திய இராணுவத் தளபதி' பட்டமளித்து பிரேமதாசா அவனைக் கௌரவித்துள்ளார்.

ரஞ்சன் விஜியரத்னேயின் சாவு ஈழத் தமிழருக்குச் சற்று ஆறுதலாகவும், புலிகளுக்கு இராணுவ - அரசியல் ரீதியில் சாதகமானதாகவும் இருக்கலாம். ஆனால், ஈழ விடுதலை இயக்கமும், ஈழத் தமிழரும் சந்திக்கும் பிரச்சினைகள் எதிலும் மாற்றம் ஏற்படப் போவதில்லை.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் ஈழத்திலிருந்து வெளியேறி ஓராண்டாகப் போகிறது. அந்தச் சமயத்தில் ஈழப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை - சமாதானத் தீர்வு ஏற்படுவதாகத் தோன்றியது. ஆனால், பிரேமதாசா அரசுடன் புலிகள் நடத்தி வந்த இரகசிய பேரம் முறிந்து போனதால், ஈழத்தில் மீண்டும் போர் துவங்கியது.

கிழக்கு மாகாணத்தை சிங்கள இராணுவம் பெரும்பாலும் மீட்டுக் கொண்டது; வடக்கிலே நகரங்கள் மீது குண்டு வீசியும், பொருளாதாரத் தடை விதித்தும ஆயிரக் கணக்கானோரைக் கொன்று வருகிறது. இலட்சக் கணக்கானோர் இலங்கையிலும், இந்தியாவிலும் அகதிகளாக அலைகின்றனர்.

யாழ்க் கோட்டை உட்பட வடக்கிலுள்ள சிங்கள இராணுவ முகாம்கள் சிலவற்றைத் தாக்கி அழிப்பதில் புலிகள் வெற்றி பெற்றனர்; ஆனாலும் புலிகளது பாசிசப் போக்கில் மாற்றம் ஏற்படாததால், மக்களிடமிருந்து கணிசமான அளவு ஆதரவை இழந்தனர். தமது சொந்தக் குழு நலன்களை முன்னிறுத்தி மக்கள் தேவைகளை முற்றாகப் புறக்கணிப்பது; கட்டாய வரிவசூல், மாற்றுக் குழுவினரெனச் சந்தேகிப்போரை சிறைப் பிடித்துக் கொல்வது; மாற்று இயக்கங்களைத் தடை செய்வதும் அதிகரித்துள்ளது.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின் போதும், அதற்கு முன்னும் ஈழ முஸ்லீம் அமைப்புகளுடன் புலிகள் போட்டுக் கொண்ட ஒப்பந்தத்தை முறித்து, இருபிரிவினரையும் மோதவிட்டு அழிப்பதில் ரஞ்சன் விஜியரத்னே பிரேமதாசாவின் சூழ்ச்சிக்கு குறுகிய தேசிய வெறி - பாசிசத் தன்மை காரணமாக புலிகளும், மதவாதத் தலைமையின் காரணமாக முஸ்லீம் அமைப்புகளும் பலியாகினர். வடக்கில் இருந்து வெளியேறும்படி முஸ்லீம் மக்களுக்குக் கெடு வைத்து புலிகள் தாக்குகின்றனர். கிழக்கிலுள்ள தமிழர்களை முஸ்லீம் மதவாதிகள் தாக்குகின்றனர்.

ஆக, சிங்கள இராணுவத்துக்கு எதிரான போரைப் புலிகள் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தபோதும், ஈழ விடுதலை இயக்கம் சரியான திசையில் முன்னேறுவதாகக் கூற முடியாது. மற்ற பிற ''பெரிய'' குழுக்கள் துரோகிகளாகி எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு ஈழ மக்களைக் காட்டிக் கொடுக்கின்றன; இதே நிலைக்கு ஈரோஸ் அமைப்பின் ஒரு பிரிவைப் புலிகள் தள்ளிவிட்டனர்; எஞ்சியிருந்த சிறு குழுக்களையும் புலிகள் வேட்டையாடுகின்றனர்; ஈழ மக்களும் தாமே முன் வந்து விடுதலைப் போருக்கு ஆதரவளிப்பது குறைந்து நிர்பந்தமே மேலோங்கி வருகிறது.

ஈழ விடுதலை இயக்கத்துக்குச் சரியான அரசியல் - சித்தாந்தத் தலைமையின்றி, அது குறுகிய தேசியவாத, பாசிச புலிகளின் பிடியில் சிக்கியிருப்பதாலேயே ரஞ்சன் விஜியரத்னே போன்ற பிணந்தின்னும் கசாப்புக்காரர்கள் அதை ஒடுக்குவதில் முன்னேற முடிகிறது. ஆகவே, இவ்வளவு பெரும் இழப்புகள், தியாகத்துக்குப் பிறகாவது, கடந்த காலத் தவறுகளில் இருந்து பாரிய படிப்பினைகள் பெற்று சரியான அரசியல் - சித்தாந்தத் தலைமையைத் துணிவுடன் நிறுவுவதற்கான போராட்டத்தை ஈழப் போராளிகள் முன்னெடுக்க வேண்டும்.

● மாணிக்கவாசகம்.



அரசு பயங்கரவாதம்; சிங்கள இளைஞர் பலி